
T-UN-522

# அருள்திரு சிவசுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் செங்குந்தகோட்டம்



# "உயிர் வருக்க தெய்வ மணி மாலை"

# நூலாசிரியர் முன்னுரை

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாம் உலகன்னை, சராசரங்களைப் படைத்து, நெறி முறைகளையும் வரம்புகளையும் வைத்துப் பாது காத்து வருகின்றாள். உலகில் சிற்சில காலங்களில் நெறிமுறை பிறழ்ந்தும் வரம்பு நிலைகடந்தும் நிலைகுலையும் வேளையில், இடம் காலம் செயல் இவற்றிற்கு ஏற்றனவாகிய பல்வேறு வடிவநாமங்களில் உலக அன்னையே அவதரித்துக் குற்றங்களை நீக்கிக் குணம்பெய்து நெறிப் படுத்தி, வரம்புள் அடக்கி காத்து வருகின்றாள் என்பது ஞானியர்களின் ஒப்பமுடிந்த முடிவாகும்.

இவ்வாறு உலகன்னையின் அவதாரங்களெல்லாம் உலக முழுவதும் பரவ, பல்வேறு தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றாள். அவ் அவதாரங்களுள் ஆனைமுகப்பிள்ளையாரும், ஆறுமுகப்பிள்ளையாரும், உலகெங்கும் அறிந்த நிலையில் விளங்குபவராம்.

அத்தகைய பெருமைமிக்க "ஆனைமுகனைத்தொழுது சைதை சிவசுப்பிரமணிய சுவாமி மீது பதிகம் இயற்றிப்பாடித் தரவேண்டும்" என எம்மை, எமது அரிய நண்பர்கள் புலவர் திரு. ந. ரா. தேவராசனார் அவர்களும், அவர்தம் இளவல் (திருக்கோயில் ஆசிரியர்) புலவர். திரு. ந. ரா. முருகவேள் M. O. L. அவர்களும் அன்புக்கட்டளையிட்டனர். ஆயினும் ஆண்டுகள். பலவாகியும் அப்பணியினை நிறைவேற்ற இயலாத நிலையில் சில ஆண்டுகள் கடந்தன.

இவ்வாறான நிலையில், எமது மைத்துனரும் தலைமாணுக்கருமான ஆசிரியர். அரச. பெ. இராமசாமி அவர்கள் காலம் கடந்ததை எண்ணி வருந்தி "முன்னவர்தம் அன்புக்கட்டளையை உடனடியாக நிறை வேற்றியே தீரவேண்டும்" என மேலும் எம்மைத் தூண்டினார்கள்.

அன்றிரவே எமதுகனவில், துறவி ஒருவர் தோன்றித் திருநீற்றை எமக்களித்து, இளநகை புரிந்து, 'புனிதமானதும், நிலைபேறுள்ளதுமான பாமாலையை இயற்றுவாய் எனபணித்து மறைந்தருளினார்.

நான்கண்விழித்துக் 'குமரனின் அருள்நிறைதூண்டலே இது' எனப் புரிந்து கொண்டு சைதை செங்குந்த கோட்டத்துத் திருமுருகன் மீது, பக்தியுடன் இந்த உயர்வருக்க மாலையை அவனருள் கொண்டு இயற்றியுள்ளேன்.

இச்சீர்மிகு சென்னையில் சைதை சிவசுப்பிரமணிய சுவாமியின் திருக்கோயில். செழுமைமிகு செங்குந்த மரபினர்களால் நிறுவப்பெற்று 450 ஆண்டுகளாக, சீரும், சிறப்புடனும் திருப்பணிகள் செய்தும், ஆண்டு தோறும் திருவிழாக்கள், நித்தியபூசைகள் நிகழ்த்தியும் வருவது யாவர்க்கும் மகிழ்ச்சியே.

மேலும் இக்கோயில் அறங்காவலர்கள், யாம்இயற்றியுள்ள இந்த உயிர்வருக்க தெய்வமணி மாலையை மகிழ்வுடன் மதித்துப் பதிப்பித்து வெளியிட முன்வந்தமைக்கு எமது மனமார்ந்த நன்றியை என்றும் உரித்தாக்குகிறேன்.

சைதை:- இங்ஙனம்,

சென்னை-600 015. **புலவர். அ. இரா. திருவேங்கடன்.**

10-9-1989

## மதிப்புரை

தமிழ் மொழியில் உள்ள தொண்ணூற்றுறு வகைப்பிரபந்தங்களுள் ''உயிர் வருக்க மாலையும்'' ஒன்ருகும்.

உயிர் வருக்க மாலையாவது; அ முதல் ஔ ஈருக உள்ளவற்றை மொழிக்கு முதலாகக் கொண்டு ஒவ்வோர் செய்யுள் கூறுவதாகும்.

உயிர் எழுத்துக்கள் மட்டுமின்றி ஆய்த எழுத்திற்கும் ஒருபாடல் இயற்றப்பெற்று, பதினன்காம் பாடலில் உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1, ஆகிய எழுத்துக்கள் அமையப் பெற்றதாகவும், ஆறுபடை வீட்டுடன் செங்குந்த கோட்டமும் சேர்த்து இயற்றப் பெற்றுள்ளது. இந்தச் சிவ சுப்பிரமணிய சுவாமி உயிர்வருக்க மாலையின்' சிறப்பாகும்.

மேலும் முதலில் காப்புச் செய்யுளில் ''ஓம்'' என்னும் மூலமாம் பிரணவத்தால் தொடங்கி, இறுதியில் நூற்பயன் கூறும் பாடலிலும் ''ஓம்'' என முடிந்து இப்பாமாலை ஒரு பிரணவமந்திர மணிமாலையாக மிளிர் கிறது.

இப்பாடலைப் படிப்போர், படிக்கக் கேட்போர், பாதுகாத்துப் பரப்புவோர் யாவரும் அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமியின் திருவருளைப் பெற்றுச்சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு பெற்றுய்வர் என வாழ்த்துகிறேன்.

### சாற்றுக்கவி

### எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வாரணனுக் கிளையோன் வளமோங்கு சீர்சைதைச் செங்குந்த கோட்டம் வளர்வான்
நாரணனுர் மிகமகிழும் நன்மருகன் சிவகுருவாம் நாதன்திருப் புகழ்சீர் செப்பும்
தாரணயோ கத்தவத் திருவேங்கடத்தமிழ்க் கவிமணி சொன்மாலை வல்ல
சீரணிநற் றெண்டர் திருத்தாள் எம்சென்னி மிசையிலங்கும் சேம வைப்பே!

சைதை, சென்னை-15.
10-9-'89

அன்பன்
**திருவேங்கடதாசன்**
நல்லாண் அரச. பெரிய. இராமசாமி,
ஓ. பெ. ஆசிரியர்.

உ

முருகன் துணை

சென்னை. சைதை செங்குந்த கோட்டம் வளர்

**அருள்மிகு சிவ சுப்பிரமண்ய சுவாமி**

(செங்குந்த கோட்டம், ஆறுமுகச் சிவனார் அருளாணைப்படி பாடப்பெற்றது.)

# உயிர் வருக்க தெய்வ மணி மாலை

## காப்பு.

ஓமென்னும் தூய்மைசேர் ஓர்வடி வாயிவ் வுலகமெல்லாம்
தாமன்னும் வள்ளலாம், தாங்கும் தயாபரத் தந்திமுகன்
பூமன்னும் செங்குந்தப் பொன்னுனை யாம்பாடப் புந்திதந்தே
நாமன்னும் பேறுற நத்தினன் பாரம் நமக்கலவே!

## நூல்

### உலகொடுயிர் புரக்கும் தேவி உமை.

1. அரியரனும் பிரமனும் அமரரும் அசுரரும்
அணிமாந்தர் மற்றுயிர்களும்
ஐம்பெரும் பூதமும் அகிலாண்ட கோடியும்
அசைவனவும் அல்லனவுமாம்
திரிகுணனும் உற்றவுயிர் திசையெங்கும் உருவாகத்
தேவியுல கன்னைசெய்து
திருவருளின் காத்துவரத் தீயகுணத் தசுரகுலம்
திகைப்புறுமா றுலகைவாட்டும்
எரிகுணனும், அஞ்சாத இழிசெயலும், உற்றவராய்
எதிர்ப்பாரும் வெல்வாருமில்
இடர்சூர பன்மனெடு மீனர்பல் லாயிரவர்
இறுமாந்து மூன்றகாலை,
கரிமுகனும் மெச்சுமொரு கர்த்தனென வந்தபெரு
கனசென்னை வளர்சைதைசூழ்
கனிவுசேர் செங்குந்த கோட்டமுறு கந்தனே!
கன்னியுமை சிவபாலனே!

### ஒரு திருமுருகன் ஆங்கு உதித்தனன்.

2. ஆயனயன் ஈசனெடும் அண்டர்பதி இந்திரனும்
அரக்கர்தமக் கஞ்சியோட,
ஆக்கிக்காத் துலகமெலாம் அவ்வப்போ துருமாற்றி
யருள்கின்ற உலகன்னைதாம்,
நேயரினம் காத்திடவும், நிருதரினம் மாற்றிடவும்
நிகரிலொரு மார்க்கமென்ன,
நெடுயோகம் மேற்கொண்ட நீள்சடையன் ஆற்றலும்
நின்றோங்கும் வண்ணமாக

மாயமிகு மதனேவி, மலரம்பு தூவிசிவன்
மனமாறும் வகைசெய்திட
மதிசரவ ணப்பொய்கை மாதவனும் மூழ்கியெழ
மற்றங்கு மலராறினும்
தூயமக வொன்றென்று தோன்றிவரும் குமரேச!
தொகுசென்னை வளர்சைதைசூழ்
துகளிலாச் செங்குந்த கோட்டமுறு தூயனே!
துணையாகு மொருநேயனே !

பரிவுடை யன்னையும் சண்முகச் சேயோனும்.

3. இதமேவும் கார்த்திகையர் எனுமாறு கன்னியரும்
இருமூன்று குழவியேந்தி
ஏககா லத்தடைந் திவைகாக்க வேண்டுமென
இணையடிப ணிந்துவேண்ட
பதமேவு தருணமெதிர் பார்த்தவுல கன்னையவள்
பாலரறு வரையுமேற்றுப்
பரிவினொ டணைத்தனள் பகருமெய் ஒன்ருகிப்
பன்னுசிரம் ஆறுகொண்டே
சதமாகி நின்றிந்த சகமெலாம் காத்தருளும்
சண்முகத் தெய்வமணியாய்ச்
சாலோக சாமீப சாரூப சாயுச்யம்
தருகின்ற முருகவேளாய்,
மதமேவு நிருதகுல மறலியாய் வந்தருளும்
மதிசென்னை வளர்சைதைசூழ்
மாசிலாச் செங்குந்த கோட்டமுறு மைந்தனே!
மாதேவன் அருள்சேந்தனே!

மயில் மீது உலகை வலம் வந்த முருகன்.

4. ஈடிலிசை நாரதனோர் இனிமைமிகு மாங்கனியை
ஈசன்கரம் தந்துசெல்ல,
''இவ்வுலகை வலமாக இருவீருள் யார்வந்து
இவண்முந்தும் அவற்கா''மென
ஆடிமகிழ் கின்றசிவன் ஆதிபரா சக்தியெனும்
அம்மையெதிர் கூறியமர,
ஆலுமயில் ஏறிவிரைந் தவனிவலம் வருவதென
அழகுமுரு காநீசெல,
''கோடிமுறை புவியினொடு கோயில்வலம் வந்தபலன்
கூடிய''தென் றுனைமுகனே
'குழைநெஞ்சொ டன்னைபிதா கும்பிட்டு வலம்வந்து'
கொடுத்தகனி யுண்ணுவேளை,
ஓடிவரு 'மூலகமுணர் ஒருபழம்நீ யாகும்நீ'
உயர்சென்னை வளர்சைதைசூழ்
ஒப்பற்ற செங்குந்த கோட்டமுறு மொருவனே,
உலகருள வருதேவனே!

## தந்தைக்கு உபதேசம் செய்த தனயன்.

5. உலகுபடை தொழிலேற்ற உயர்வேத நான்முகனும்
உலகவரும் தேவகணமும்
ஓயாமல் எந்நாளும் உமையவளைச் சங்கரனை
உவகையொடு சூழ்தலோர்ந்த
பலகபட கூத்தனெனும் பாலகுக! பிரமனை நீ!
பன்னுமொரு பிரணவத்தின்
பாங்குமிகு பொருள்வினவப் பகரானைச் சிரங்குட்டிப்
பகைச்சிறையி டக்கலங்கி,
அலகையொடு மிடுசுடலை ஆடுசிவன் நாடி 'யதன்
அரும்பொருளை ஓது'கென்ன
அரியகுரு சீடனென ஆக்கியுப தேசித்து,
அன்னைபிதா தாள்வணங்கி
இலகுபடை சக்திவேல் இனிதருளப் பெற்றோங்கும்
எழில்சென்னை வளர்சைதைசூழ்
ஏற்றமிகு செங்குந்த கோட்டமுறு கோலனே!
ஈரமிகு வடிவேலனே!

## சூரபன்மனை ஆட்கொண்ட வேலாயுதன்.

6. ஊறுவிளை யசுரகுலத் தொருசூர பன்மனெடும்
ஒன்னலரை வீழ்த்தவேண்டி
உற்றபெரும் படைத்தலையாய் உயர்வீர பாகுவொடும்
ஒருகடம்ப னிடும்பனெடும்,
மாறுவிளை விக்கவென மாவீர பாகுவினை
மாற்றார்க்குத் தூதனுப்ப,
மதியாத எதிரிமா மரமாகி, மலையாகி
மால்மருக! நின்னெடுபொர,
வீறுவிளை கதிராடு வேலோச்சி யிருகூறாய்
வேறுபடச் செய்தவேளே,
வென்றிமயில் சேவலென விளித்துவலம் வந்தவனை
வினைமாற்றி யாட்கொண்டனை,
பேறுவிளை வித்தபுகழ் பேராள! நலமெலாம்
பெறுசென்னை வளர்சைதைசூழ்
பெருமைமிகு செங்குந்த கோட்டமுறு பெரியனே!
பிழைதீர வருநாதனே!

## தேவ குஞ்சரி, வள்ளிதிருமணம் கொண்ட குமரன்.

7. எதிர்சூர பன்மனெடும் இழியசுரர் குலம்வென்ற
இனியசெயல் கண்டுவந்தே,
இந்திரனும் தனதுமகள் எழில்தேவ குஞ்சரியை
ஏற்கவெனத் தந்துவேண்ட,
அதிர்சேரு துந்துமியோ டமரரிசை யொடுவாழ்த்த
அங்கைபிடித் தாட்கொண்டநீ,

அழகுநிறை வள்ளிமனத் தசையாத பேரன்பின்
அடிமையென ஆகியவளை,
வெதிராரும் வண்டுதுளை விளவிநெடு மருவியிசை
வெற்படியின் ஆயல்வேளை,
வில்லேந்து வேடனென, வேங்கையென, வேலனென
வேட்டனைநீ வேழமுகனால்,
பொதிராரு பேரருளின் பொன்னனே! வளமெலாம்
பொலிசென்னை வளர்சைதைசூழ்
புனிதநிறை செங்குந்த கோட்டமுறு வள்வனே!
புகலவரு மொருபுலவனே!

## நக்கீரனால் திருமுருகாற்றுப் படைகொண்ட அழகன்.

8. ''ஏலமணி கூந்தலிடை இயற்கைமணம் இல''வாமென்
றிறுதிவரை வாதுசெய்த
ஏற்றமிகு நக்கீரன் இறைவனுதற் கண்வீசும்
எரிதழலி டர்ப்படாமல்
சீலமணி நினதுபுகழ் சேர்பொற்ரு மரைக்குளத்துச்
சேர்த்தருளிக் காத்தகோவே!
சிறுமதியன் வல்லசுரன் சேர்த்துபலி யிடக்குகையுள்
செறிபலருள் சிக்கவைத்தே,
கோலமணி ஆறுபடை கொண்டுபல தொண்டர்வாய்க்
கூறுதமிழ் கேட்டுமகிழும்
குமரேச! நின்னுமம் கூறிடுவர், எண்ணிடுவர்
குறைநீக்கி யருளுகின்ற,
'ஆலமணி கண்டசிவ அம்ச'னென வருகுமர!
அணிசென்னை வளர்சைதைசூழ்
அருளோங்கு செங்குந்த கோட்டமுறும் அமரனே!
அண்ணலா மதிவீரனே!

## சுட்டகனி, சுடாதகனி,-ஔவைக்கு உணர்த்திய குகன்.

9. ஐயையாம் கலைமகளே ஔவையெனப் பாருலகில்
அவதரித்தும், ''மானிடத்தை
ஆட்படுத்தும் முக்குணம்செய் அவசத்தான்
முறைமறத்தல்
அறிவிப்பான்'' ஆன்புரக்கும்
மெய்யவாம் உடல்செயலான் மேலுரையான் எனவந்து
மிளிர்நாவல் மேலிருந்து,
மேவுகனி யுண்டுவிதை மிகவீசி நின்றவுனை,
மேனோக்கிக் கனிவேண்டநீ
''வெய்யவாய்ச் சுட்டகனி வேண்டுமோ? அல்லாது
வேண்டுவசு டாதகனியோ?

விள்ளுகென'' வையங்கொள் வித்தகிசு டாதகனி
வேண்டிவாய் ஊதுமெல்லேப்
பையவாய்ச் சுடாதுதிப் பார்த்துணெனச் செப்புவோய்!
பகர்சென்னை வளர்சைததூழ்
பாவமறு செங்குந்த கோட்டமுறு பழநீநல்
பாங்கருளு மினிதேனனே!

## ஆண்டிச் சுப்பனுன தன்னேயும், சிவகவியால் பாட வைத்த முருகன்.

10. ஒப்புயர்வி லாதசிவன் ஒருவனலால் மற்றவரை
ஒருபோதும் துதியேனென,
உலகறியக் கூறிவரு மொருபுலவன் சிவகவியென்
றுலவுதலேக் கண்டுமேனுள்,
அப்புலவன் கோயில்புக் கரனுரின் புகழ்பாடி
அடிபோற்றி மீண்டகாலே,
அவ்வரணின் புறத்தமர்நீ அவற்கிரங்கிக் கூவிநினே
'அருந்தமிழாற் பாடு'கென்றே
செப்புமுனே மதியாது ''மப்பனெனுங் கோழியொடும்
சுப்பனெனுங் குஞ்சுநின்னேச்
சேர்த்தோதேன் செல்வ''னெனச் சென்றுனேச்
செருக்கொழியச்
சினேமுட்டை பாடுவித்தே,
இப்புவியில் நின்னுடைவன் இணேயுவகை நாட்டுவோய்!
இதசென்னே வளர்சைதைசூழ்
இணேயிலாச் செங்குந்த கோட்டமுறு மெழிலனே!
இசைவள்ளி மணவாளனே!

## அருணகிரியை யாட்கொண்ட ஆறுமுகன்.

11. ஓங்குதிரு வருணேயெனும் உயர்மாந்தர் வாழ்பேரூர்
உண்ணுமு லேயவனேயும்,
உன்னியவர் வினேதீர ஓதுபெரு முத்திதரும்
ஒருவனண் ணுமலேயையும்,
ஆங்குநிறை கற்புநெறி யசையாத மாதரையும்,
அருந்தவத் தார்தம்மையும்
அனுதினமும் வலமாகி யமரர்தொழும் அரசுபதி
அவண்தோன்றும் அருணகிரிதான்
தீங்குநிறை சிற்றின்பத் திட்டிவிடத் தாணுைந்து
திருப்புகழ்ப லாயிரம்சொலித்
தீராத நோய்க்கஞ்சித் திருக்கோபு ரத்தேறித்
தேவனுனே யெண்ணிவீழத்
தாங்குசிறை விடுகிளியாய்த் தக்கவருள் தாம்சேர்க்கும்
தகுசென்னே வளர்சைததூழ்

தருநிகரும் செங்குந்த கோட்டமுறு தருமனே !
தயைமேவும் பலநாமனே !

## தினமும் இசைவெள்ளத்தில் மூழ்கும் செங்குந்தகோட்டம் வளர் வள்ளல்.

12. ஔவியமில் சித்தர்முனி ஆண்டிமுதல் அரசன்வரை
அவனியுள மாந்தரெல்லாம்
"ஔடதமும் மந்திரமும் அவையேற்கும் தந்திரமும்
ஆகுவைநீ" யென்றறிந்தே
பவ்வியராய் நின்னுமம் பன்னியுயர் நலமேவிப்
பாரின்மிசை யுலவுகின்றார்;
பகர்குமர குருபரனும் பாம்பன்சி தம்பரனும்
பணிராம லிங்கனுரும்
செவ்வியருர் திருவருணைச் சேசாத்ரி ரமணரொடு
சீர்த்தகுகை நமசிவாயர்
செகத்தாரும் வேங்கடனும் சிந்தைவளர் குருசீடச்
செம்மலரும், போற்றுகின்ற
திவ்வியரின் இசைவெள்ளம் தினமூழ்கும் வள்ளலே !
திகழ் சென்னை வளர்சைதைசூழ்
திருமேவு செங்குந்த கோட்டமுறு தேவனே !
தெய்வகுஞ் சரிபாகனே !

## எழில் வள்ளி குஞ்சரியொடு, மயில்மீது வந்து தரிசனம் தரும்படி வேண்டுதல்.

13. அஃகாதிவ் வுலகையெலாம் ஆக்கிக்காத் துய்யுவகை
அருள்வாலைத் தேவிமகிழ,
அயராது பணியாற்றி அனுதினமும் காத்துவரும்
ஆறுமுகத் தெய்வநின்னை,
"எக்காலும் மறவாதுன் இனியபுகழ் பாடுமொரு
ஏற்றமிகு பாங்களித்தே
எழில்வள்ளி குஞ்சரியொ டேறிமயில் சேவல்கொடி
எதிரில்செங் குந்தமேந்தி
மிக்காரும் இல்லையுனை ஒப்பாரும் இல்லையெனும்
மேலவர்சொல் ஓங்குவண்ணம்
மெய்ப்பொடிகுங் குமம் சாந்து மென்மலர்பொன்
மாலைகளும்
மிளிரணிபட் டுடையணிந்தே
தக்காங்கெம் எதிர்வந்தும் தரிசனைநீ தரவேண்டும்
தளிர்சென்னை வளர்சைதைசூழ்
தருமமிகு செங்குந்த கோட்டமுறு தலைவனே !
தரணிபுகழ் குருநாதனே!"

## ஆறுபடை வீட்டிலும், வளர்சைதைச் செங்குந்த கோட்டத்திலும் திருக்குமரனின் எழிற்கோலம்.

14. அரிபிரமன் புடைசூழ ஆசில்பழ முதிர்சோலை
ஆனைமுக னுடனிருந்தும்,
இரியசுரர் பகையஞ்சும் இமையவர்சூழ் சுவாமிமலை
ஈசனுமை யுடனிருந்தும்,
உரியபல தொண்டரொடு உயர்பழனி மலையமுத
ஊற்றுகி நீடுகாத்தும்,
எரியுமிழும் செங்குந்தம் ஏந்திதிருச் செந்தூரில்
எழுந்தருளி இவ்வுலகரின்
திரியவரும் ஐம்புலனைத் திட்பமுடன் ஒட்பமுறத்
திகழுவகை ஓங்குவித்தும்
பிரியதிருப் பரங்குன்றில் பிணிதீர்க்கும் ஔடதமாய்ப்
பேணியுமஃ காதுகாத்தும்,
பெரியதிருத் தணிவள்ளி பிடிதெய்வ மொடுவாழ்ந்தும்
பெருஞ்சென்னை வளர்சைதைசூழ்
தெரியவரும் செங்குந்த கோட்டமுறு திலகனே!
தெளிவிக்கு மனுகூலனே!

### நூற்பயன்

வேலையும் வள்ளிதெய் வீகைகோன் சேவல் விரைமயிலின்
காலையும் தொட்டுத்தம் கண்ணொற்றிக் கொண்ட
கணக்கதாக்கும்.
ஓலையும் இட்டோர் உளத்தொடும் கூட்டும் உயிர்வருக்க
மாலையும் பாடுநன் மாண்பளி ஓமெனும் மந்திரமே !
உயிர் வருக்க தெய்வமணிமாலை முற்றும்]

சைதை, சென்னை-15. நூலாசிரியன்
30-8-89 புலவர். அ. இரா. திருவேங்கடன்



ஸ்ரீ சாய் கலர் பிரிண்டர்ஸ் 20 குளக்கரைத் தெரு,
சைதை, சென்னை-15. Ph : 44 14 75

*With best compliments from :*

Phones : 44 14 75
44 77 41
4821153

**SRI SAI COLOUR PRINTERS**

**&**

CUNSOLIDATED PRINTS
PRIVATE LIMITED

**LETTER PRESS, OFF-SET,
SCREEN PRINTERS
&
DESIGNERS**

20, Tank Square Street,
SAIDAPET,
MADRAS-600 015.